## (ஈ) மத்திய வங்கித் தொழிற்பாடுகள்

மத்திய வங்கியின் சர்வதேச ஒதுக்கு நிதி 1966ஆம் ஆண்டில் 1392 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியடைந்து, அவ் ஆண்டின் இறுதியில் 1430 இலட்சம் ரூபாய்களாக விளங்கிற்று. இவ்வாண்டில் மத்திய வங்கி சர்வதேச நாணயசபையிலிருந்து கொள்வனவு செய்த அந்நிய செலாவணியின் நிகரத் தொகை 714 இலட்சம் ரூபாய்களாகும். எனினும் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஏற்பட்ட குறைபாடுகளினுல் அந்நிய செலாவணி வருமானங்கள் பெரிதும் துண்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து மத்திய வங்கியின் சர்வதேச ஒதுக்கு நிதி இவ்வாண்டிற் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தது.

1966ஆம் ஆண்டில் மத்திய வங்கியின் உள்நாட்டு இருப்புச் சொத்துக்கள் 3052 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. மத்திய வங்கியின் உடைமையிலிருந்த அரசாங்கப் பிணைகளும், அரசாங்க உத்தரவாதம்பெற்ற பிணைகளும் 1559 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்திருக்கையில், விசேட கடன்கள் 212 இலட்சம் ரூபாய்களாலும் தற்காலிக முற்பணங்கள் 53 இலட்சம் ரூபாய்களாலும் அதிகரித்தன. எனவே, மத்திய வங்கிக்கு அரசாங்கம் கொடுக்கவேண்டிய மொத்தக் கடன் 1824 இலட்சம் ரூபாய்களால் உயர்வுற்றது. வர்த்தக வங்கிகளும் ஏனைய நிலையங்களும் பெற்ற கடன்கள் 364 இலட்சம் ரூபாய்களாலும், "ஏனைய இருப்புச் சொத்துக்களும் கணக்குகளும்" 864 இலட்சம் ரூபாய்களாலும் அதிகரித்தன.

மத்திய வங்கியின் மொத்த வைப்புப் பொறுப்புக்கள், 1966ஆம் ஆண்டில் 1148 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. இவ் அதிகரிப்பு அரசாங்க வைப்புக்களும், சர்வதேச நிலையங்களின் வைப்புக்களும் அதிகரித்தமையினுல் ஏற்பட்டது. இதை ஓரளவு ஈடு செய்து வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் வீழ்ச்சியடைந்தன. இவ்வாண்டில் மத்திய வங்கியின் நாணய வெளியீடு 91 இலட்சம் ரூபாய்களாற் குறைவுற்றது.

### கொடுகடன் கொள்கை

வர்த்தக வங்கிகளின் கொடுகடன் விரிவைக் கட்டுப்படுத்துவதற்காக 1965ஆம் ஆண்டில் மத்திய வங்கி மேற்கொண்ட நட்வடிக்கைகள் சென்ற வருடாந்த அறிக்கையிற் கூறப்பட்டுள்ளன. தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக்கொடுகடன் 1965ஆம் ஆண்டுவரை ஒரே மிதமாக அதிகரித்துக்கொண்டு வந்தமையைத் தொடர்ந்து மேலதிகமான நாணயக் கேள்வி எழும்பக் கூடியதாயும், விலைகள் அதிகரிக்கலாமென எதிர்பார்த்துப் பொருட்களைப் பதுக்கல் செய்யக்கூடியதாயும் காணப்பட்ட நிலைமை, மத்திய வங்கியின் முக்கிய கவனத்தை இழுத்தது. 1965ஆம் ஆண்டில் மத்திய வங்கி கையாண்ட நாணயக் கொள்கைகளுள் வங்கி வீத உயர்ச்சியும், வர்த்தக வங்கிக் கொடுகடன் மீது விதிக்கப்பட்ட ஓர் எல்லையும் முக்கியமானவைகளாக அமைந்தன. அன்றியும், கொடுகடன்கள் உற்பத்தித் தேவைகளுக்காக விநியோகிக்கப்பட வேண்டுமேயன்றி, நுகர்ச்சித் தேவைக்கான கொடுகடன்கள் ஒறுக்கப்படவேண்டும் என்ற தன்மையை மத்திய வங்கி வர்த்தக வங்கிகளின் கருத்திற் பதியவைத்தது. கொடுகடன் விரிவு குறிப்பிடத்தக்க அளவிற் குறைவடைந்ததென்பது 1965ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியிற் காணப்பட்டது. தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் 1963ஆம், 1964ஆம் ஆண்டுகளில், முறையே, 1369 இலட்சம் ரூபாய்களாலும், 628 இலட்சம் ரூபாய்களாலும் அதிகரித்தமைக்கு எதிராக, 1965ஆம் ஆண்டில் 42 இலட்சம் ரூபாய்களால் மட்டும் அதிகரித்தது.

1965ஆம் ஆண்டிற் புகுத்தப்பட்ட நாணய நடவடிக்கைகள் 1966ஆம் ஆண்டின் நடுப்பகுதிவரை நடைமுறையிலிருந்தன. 1966ஆம் ஆண்டில் நிலவியபொருளாதார நிலைமைகளின் சந்தர்ப்பத்தில் வங்கிக் கொடுகடனுக்கான கேள்விகள் தொடர்ந்தும் அதிகமாக விளங்கியதுடன், அவ்வருட முற்கூற்றில் கொடுகடன் விரிவும் ஓரளவு

காணப்பட்டது. ஆயினும் கொடுகடன்களின் மொத்தத் தொகை அப்பொழுது நடைமுறையிலிருந்த வரையறுப்பெல்லேயை அணுகக்கூடுமென்ற அறிகுறிகள் எதுவும் காணப்படவில்லே. ஆகவே, கொடுகடன்மீது விதிக்கப்பட்ட எல்லேகளேத் தொடர்ந்தும் வைத்திருப்பது தேவையற்றதெனக் கருதப்பட்டது. இதனுல் அவ்விதிகள் 1966ஆம் ஆண்டு யூன் மாதத்தின்பின் நடைமுறையில் வைக்கப்படவில்லே. எஞ்சிய காலத்தில் வர்த்தக வங்கிக் கொடுகடன் விரிவுற்றதாயினும், அவ்விரிவு மேலதிகமானதெனக் கருதப்படவில்லே. அன்றியும், அவ்வங்கிக் கொடுகடன் விரிவில் ஏற்பட்ட அதிகரிப்பிற் பெரும்பகுதியான தொகை உற்பத்தித் தேவைகளுக்காகவே விநியோகிக்கப்பட்டது.

1965ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் திகதி, 5 சதவீதமாக அமைக்கப்பட்ட வங்கி வீதம், 1966ஆம் ஆண்டு முழுவதும் தொடர்ந்து நடைமுறையில் இருந்தது.

**வங்கித் தொழில் அபிவிருத்தி**

கிராமிய கொடுகடன் வழங்குவதிற் கூட்டுறவு இயக்கங்கள் வகிக்கும் நிலேயைப் பரிசீலனே செய்வதற்கான குழு ஒன்றை அரசாங்கம் 1966ஆம் ஆண்டு சனவரி மாதம் நியமித்தது. மத்திய வங்கியின், பொருளாதார ஆராய்ச்சி இயக்குநரும் உட்பட்ட இக்குழுவின் ஆலோசனேப்படி, கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு விவசாயச் சேவைத் திணேக்களத்தினுல் இப்பொழுது வழங்கப்படும் பயிர்ச் செய்கைக்கான கடன்களே இனிமேல் மக்கள் வங்கியும் இத்திட்டத்திற் பங்குபற்ற விரும்பும் ஏனேய வங்கிகளும், மத்திய வங்கியின் தொடர்பாடுகளுக்கமைய வழங்கவேண்டும் என அரசாங்கம் தீர்மானித்தது. இத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய வங்கி ஒரு திட்டம் அமைக்கின்றது. இத்திட்டத்தின்படி விவசாயிகளுக்கு வழங்கப்படும் தனித்தனி கடன்களிற் திருப்பிமீளப்படாது தவறிய ஒவ்வொரு தொகையிலும் ஆகக்கூடிய பட்சம் 75 சதவீதம் கொண்ட தொகைக்கு மத்திய வங்கி அரசாங்கத்தின் பேரில் உத்தரவாதம் அளிக்கும். பயிர்ச்செய்கைக்குக் கடன் வழங்கும் திட்டமும், அத்தோடு சம்பந்தப்பட்ட கடன் உத்தரவாதத் திட்டமும், 1967ஆம் ஆண்டின் பெரும்போகப் பயிர்ச்செய்கைக் காலத்தில் விவசாயிகள் கடன் பெறக்கூடியதாக நேரகாலத்தோடு அமைக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் வர்த்தகவங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களே மத்திய வங்கி திருப்பி நிதியீடுசெய்யும். பொருளாதார ஆராய்ச்சித் திணேக்களத்தினுள் ஒரு புதிய கிளேயாகக் கிராமியக் கொடுகடன் பகுதி என்ற பிரிவும் நிறுவப்பட்டிருக்கிறது. இப்புதிய பகுதி இலங்கையின் கிராமியக் கொடுகடன் சம்பந்தமான பிரச்சினேகளே நுணுக்கமாக ஆராய்ந்து பரிசீலனேசெய்யும்.

## அட்டவணை II (உ) 1

அரசாங்கத்தின் தேறிய

| | 1954/55 | 1955/56 | 1956/57 | 1957/58 | 1958/59 |
|---|---|---|---|---|---|
| **1. தேறிய பண மிகை/குறை (—)** | 127·6 | –1·2 | –196·4 | –222·3 | –413·4 |
| (அ) அரசிறை | 1,158·6 | 1,257·2 | 1,260·5 | 1,280·0 | 1,330·4 |
| (ஆ) செலவு (அதாவது கடன்வாங்குதல் கடன் கொடுத்தல் இயக்கங்களின் பேரில் ஏற்பட்ட தேறிய வரவுகளை அல்லது கொடுப்பனவுகளை த்விர்த்த மொத்தக் கொடுப்பனவுகள்) | –1,031·0 | –1,258·4 | –1,456·9 | –1,502·3 | –1,743·8 |
| (1) மீண்டும் வரும் செலவு (அ) (ஆ) * | –864·9 | –1,014·4 | –1,105·2 | –1,280·1 | –1,432·2 |
| (2) மூலதனச் செலவு (அ) * ... | –215·5 | –211·0 | –213·3 | –282·6 | –303·4 |
| (3) தேசிய அபிவிருத்தி ஒதுக்கு நிதியிலிருந்து அறவிடப்படும் செலவு ... | –2·1 | –4·0 | –5·1 | –3·0 | –2·4 |
| (4) விநியோகிக்கப்படாத களஞ்சியங்களும் பொருட்களும் (இ) ... | 9·9 | 1·2 | –14·5 | — | 10·5 |
| (5) அரசாங்கத் திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் (இ)<br>(6) இலங்கை - சீன வர்த்தகக் கணக்கு (இ) | 34·0 | –30·3 | –115·8 | 54·5 | –17·1 |
| (7) பல்வகைப்பட்டவை (இ) ... | 7·6 | 0·1 | –3·0 | 8·9 | 0·8 |
| **வரவு செலவு குறைக்கு நிதியீட்டல்** | | | | | |
| **2. அரசாங்கக் கடன்பாட்டு அல்லது கடன் கொடுப்பனவு இயக்கங்களின் விளைவாக ஏற்பட்ட தேறிய பண வரவுகள் அல்லது கொடுப்பனவுகள் (—)** | –39·0 | 12·2 | 175·4 | 174·7 | 351·8 |
| **(அ) உள்நாட்டுச் சந்தையல்லாக் கடன்பாடும் திருப்பிக்கொடுக்கப்பட்ட கடன்களும் (சில்லறைக்கடன்கள் உட்பட)** ... | 29·1 | –36·5 | –9·4 | 72·5 | 27·6 |
| (1) நிர்வாகக் கடன்பாடு ... | — | — | — | — | — |
| (2) வைப்புப் பணங்கள் (ஈ) ... | 34·5 | –10·8 | 9·0 | 73·9 | 27·8 |
| (3) பல்வகை நிதிகள் (உ) ... | 0·9 | –4·8 | –2·3 | 20·1 | 4·2 |
| (4) அரசாங்கத் தாபனங்களுக்கும், அரசாங்க உத்தியோகத்தருக்குமான கடன்கள் (ஊ)... | –4·5 | –20·9 | –16·1 | –21·5 | –8·9 |
| **ஆ. உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடும், கடன்களின் திருப்பிக் கொடுப்பனவும்** ... | –76·7 | 47·0 | 169·7 | 81·9 | 294·6 |
| (1) ரூபாய்க் கடன்கள் | 75·0 | 74·5 | 94·9 | 45·0 | 95·0 |
| ஆழ்நிதிக்கு வழங்கிய உதவு தொகை நீங்கலாக | 41·0 | 35·5 | 27·6 | 23·1 | 26·3 |
| | 34·0 | 39·0 | 67·3 | 21·9 | 68·7 |
| (2) திறைசேரி உண்டியல்கள் ... | –44·9 | 8·0 | –3·0 | 74·6 | 179·0 |
| (3) மத்திய வங்கி முற்பணங்கள் ... | –65·8 | — | 96·3 | –13·8 | 41·1 |
| (4) வரி ஒதுக்கு நிதிப்பத்திரங்கள் ... | — | — | 9·1 | –0·8 | 5·8 |
| **இ. அந்நிய நிதி** ... | 8·6 | 1·7 | 15·1 | 20·3 | 29·6 |
| (1) கடன்கள் ... | 12·1 | 5·2 | 18·6 | 23·7 | 35·5 |
| ஆழ்நிதிக்கு வழங்கிய உதவுதொகைகளும் அரசிறையிலிருந்து செய்யப்பட்ட நேரடிப் பொதுப்படுகடன் கொடுப்பனவுகளும் (கழிய) | 3·5 | 3·5 | 3·5 | 3·4 | 5·9 |
| | 8·6 | 1·7 | 15·1 | 20·3 | 29·6 |
| (2) நன்கொடை ... | — | — | — | — | — |
| **3. பணமிச்சங்களிலும், பொருளுதவி இணைக்கிணை நிதிகளிலும் ஏற்பட்ட மாற்றங்கள்** ... | 88·6 | 11·0 | –21·0 | –47·5 | –61·7 |
| (1) பணமிச்சங்கள் (உடனடியாகத் தேறக்கூடிய சொத்துக்களும் உட்பட) ... | 88·6 | 11·0 | –21·0 | –47·5 | –61·7 |
| (2) பொருளுதவி இணைக்கிணை நிதிகள் ... | — | — | — | — | — |

(அ) பின்னிணைப்பு 2இன் அட்டவணை, 18இன் அடிக்குறிப்பு (எ) ஐக் காண்க.

* முன்னைய நிதி ஆண்டுகளில் ஏற்பட்டு, நிதியீட்டப்பட்ட முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளின் பேரில் உண்டான நட்டங்களையும், கடன் வேலைகளுக்கான முற்பணங்களையும், மூலதனச் செலவுக்கும், மீண்டெழும் செலவுக்கும் மாற்றியதன் பயனாக எழுந்த எட்டுச்சீரமைப்புக்களை (பற்று, வரவுகள்) தவிர்க்கின்றது. ஆகவே இத்தொகைகள், இலங்கை அரசாங்கத்தின் கணக்குகளிற் பிரசுரிக்கப்பட்ட தொகைகளுடன் ஒத்திருக்கமாட்டா.

(ஆ) ஆழ் நிதிகளுக்கு வழங்கிய உதவு தொகைகளையும், அரசிறையிலிருந்து நேரடியாகத் திருப்பிக் கொடுக்கப்பட்ட பொதுப்படு கடன்தொகைகளையும் உள்ளடக்கிறது- 2ஆ (1)யும் 2இ (1)யும் காண்க.

(இ) நிதி வருட இறுதியிலுள்ள தேறிய மாற்றத்தைக் குறிக்கின்றது. 1954/55 ஆம் ஆண்டு தொட்டு, 1960/61 ஆம் ஆண்டுவரையுள்ள இலங்கை - சீன வர்த்தகக் கணக்கு விபரங்கள் வெவ்வேறாகக் கிடைக்கவில்லை.

(ஈ) வழக்குத் தொடுப்போர், ஒப்பந்தக்காரர் ஆகியோரிடமிருந்து பெற்றதையும், 1959/60ஆம் ஆண்டு வரையுள்ள அந்நிய உதவியின் செலவு செய்யப்படாத மீதியையும் உள்ளடக்கும்.

(உ) விதவைகள், அநாதைகள் ஆகியோரின் இளைப்பாறற் சம்பள நிதி, அரசாங்க சேவை சேமநிதி முதலியவற்றிலிருந்து.

(ஊ) இக்கடன்கள் கமத்தொழில், கைத்தொழில், கடனுதவிக் கூட்டுத்தாபனம், உள்ளூர்க் கடன் அபிவிருத்தி நிதி, ஏனைய கைத்தொழிற் கூட்டுத்தாபனங்களுக்குச் செய்யப்பட்டவையும், அரசாங்க உத்தியோகத்தருக்குச் செய்யப்பட்டவையுமான முற்பணங்களாம்.